பதிவு எண் —M. 5720 வெள்ளிக்கிழமையில் குருகுலத் தாள்
MADRAS

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை-4 குருகுலம், மாம்பாக்கம்; கர, மார்கழி; 21—12—51. தளிர்-12

## குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## வான் அமிழ்தம்

மக்கள் 'தேவாமிர்தம்' என்று இறவாமை பயக்கும் ஓர் அமிழ்தப் பொருளைக் குறிக்கின்றனர். திருவள்ளுவர் 'வான் அமிழ்தம்' என்று பாராட்டுவது மழையை! அவர் கருத்துப்படி, 'தேவாமிர்தம்' என்பது 'மழை' என்று தெரிகின்றது.

கடலில் கடைந்தெடுக்கப்பட்டு, மழை வெளிவருகின்றது; நச்சியல் நீங்கிய அமிழ்தமாய் உவர்ப்பு நீங்கிய நன்னீராய் நல்லவர் பொருட்டு மழை பொழிகின்றது.

எல்லாம், இறைவன் திருவருள் ஆணையே. இறைவனது ஆட்சிச் சிறப்புக்கு ஒரு புறக்கடையாளம் மழை! ஒறுத்தும் அருளியும் உலகத்தை இதனால் அவன் இயக்குகின்றான். ஆதலால், மழை என்பது, இறைவனது ஆற்றலே.

இறைவனது ஆற்றல் அமிழ்தத் தன்மை அமைந்தது; அதாவது, இறவாமைத் தன்மை அமைந்தது! இறவாமை பிறவாமையே தெய்வத்தின் மேன்மைப் பண்பு! ஆதலால், மழையும் உலகுக்கு இறவாமை பயக்கும் அமிழ்த இறையாற்றலே என்று திருவள்ளுவர் கருதினார், அதனால் உலகம் இயங்கி வருதலால்!

வானமிழ்தத்தை விட உலகுக்கு வேறு அமிழ்தம் எது? இறைவன் திருவருளால் உயிர்களுக்கு அது கிட்டுகின்றது; ஆதலால், அமிழ்தப் பண்பமைந்த மழை நீரை 'அதுதான் தமக்கு அமிழ்தம்' என்று உலகோர் தெளிய உணர்ந்து கொள்ளுதற்குரியர்.

உணர்ந்து, இறைவன் திருவருட் சாப்புக்கு எற்ப ஒழுகி, மழையைக் காலத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். 'அமிழ்தம் என்று உணரற் பாற்று' என்னும் திருவள்ளுவரது அறிவுரை, இவ்வுண்மையை வலியுறுத்துகின்றது.

**வானின் றுலகம் வழங்கி**
**வருதலால்,**
**தான்அமிழ்த மென்றுணரற்**
**பாற்று.**

வான் நின்று உலகம் வழங்கி வருதலால்—மழையிலிருந்து உலகம் இயங்கி வருதலால், தான்—அந்த மழை, அமிழ்தம் என்று—அமிழ்தப் பொருள் என்று, உணரற்பாற்று—உணர்ந்துகொள்ளுதற்குரியது.

வான் என்றது, இங்கே மழை; உலகம் நடைபெறுவதற்கு மழை காரணமாதலால், மழையிலிருந்து உலகம் இயங்கி வருகின்றதென்றார்.

உலகம் என்றது, உலகத்திலுள்ள உயிர்களை; அவை பசியாலும் வெப்பத்தாலும் தீமைகளாலும் வெதும்பி இறந்துவிடாமல், மழையின் ஆதரவால் உரிய காலம் வரையில் உயிர் பெற்றிருப்பதனால், உலகம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இறவாமல் உலகம் நடைபெறுவதற்கு மழை காரணமாயிருத்தலின், அதனை 'அமிழ்தம்' என உணரவேண்டும் என்றார். 'அமிழ்தம்' என்பது, இறவாமல் உயிர்த்திருப்பதற்கு எற்ற வன்மையைத் தரும் வலுப்பொருள்.

---

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

4-ம் ஆண்டுக் கையொப்பம்
(5-10-51 முதல்)

| | | |
|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 0 0 |
| வெளி நாடு | ரூ. | 6 0 0 |
| தனித் தாள் | | 0 1 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| | | |
|---|---|---|
| கிளை 4 | கர, மார்கழி, 21-12-51 வெள்ளி | தளிர் 12 |

## சமரச மாநாடு

இவ்வாண்டுச் சைவசித்தாந்த சமரச மாநாடு குன்றக் குடியில் நடைபெறுகிறது. சமாசம் இதுகாறும் எவ்வளவோ அரும் பெரும் சமயப் பணிகளைச் செய்திருக்கிறது.

ஆனாலும் இன்றைய சூழ் நிலையில் அது தனக்குள்ள செல்வாக்கை நன்கு பயன்படுத்தி இந்நாட்டிலுள்ள பெருந் திருக்கோயில்கள் திருமடங்களின் ஆதரவைப் பெற்றுக் கீழ்க் கண்ட செயல்களைச் செய்தற்கு ஏற்ற தீர்மானங்களை நடைபெறுகின்ற மாநாட்டிலேயே செய்து செயற்படுத்தினாலன்றி, இனி உண்மையான சமய வளர்ச்சி ஏற்படாது எனக் கருத வேண்டியிருக்கிறது. அரசியல் கட்சிகளின் போக்கும், மக்கள் வாழ்க்கை நிலையும், இளைஞர்களின் துடிப்பும் இப்போதுள்ள நிலைகளையும் நன்றாக மனத்துட் கொண்டு பார்த்தால் இவ்வுண்மை தெளிவாகத் தெரிகிறது.

இத்தகைய சூழல்களில் கூடச் சமாசம் போன்ற அரும்பெரும் அமைப்புகள் செய்யும் நன் முயற்சிகளுக்கு இந்நாட்டுத் திருமடங்களும் திருக்கோயில்களும் வேண்டிய ஆதரவுகளைச் செய்ய முன் வரவில்லையேல் அவைகள் இருந்தும் பெரும் பயனில்லை என்ற பழிக்கே ஆளாக நேரிடும். ஆதலின் சமாசம் தயங்காமல் அவைகளை அணுகி, வேண்டும் ஆதரவைப் பெற்றுக் கீழ்க்கண்ட செயல்களை நடத்த முயலலாம்; முயன்றே தீர வேண்டும்.

வெறும் மாநாடுகளும் நூல் வெளியீடுகளும் மட்டும் பயன் செய்கின்ற காலம் இது அன்று. அரசியல் கட்சிகளைப்போல் ஓர் அமைப்பு முறையில் நின்று சமயப் பணிகள் செய்ய வேண்டும். அப்போதுதான் அது சிறக்கும்.

சமாசத்தின் வழி நடைபெற வேண்டும் எனத் துடிப்புள்ள சைவ இளைஞர்கள் கருதும் செயல்களாவன :

1. திருக்கோயில்கள் திருமடங்களின் வருமானங்களில் மூன்றில் ஒரு பகுதியேனும் அறிவுத் துறையில் சமய வளர்ச்சிக்காகச் செலவு செய்யப்பட வேண்டும்.

2. திருமுறைகளும் மெய்கண்ட நூல்களுமே இந்நாட்டுத் திருக்கோயில்கள் திருமடங்களின் நிலைப்புக்குப் பெருந்துணை செய்தவை; ஆதலின், அவற்றின் ஓதுதலுக்கும் பரப்புதலுக்கும் அங்கெல்லாம் முதல் மதிப்புத் தரப்பட வேண்டும். இவ்விரு செயல்களையும் அரசாங்கச் சார்பிலும் தனிப்பட்ட மாநாடுகள், கழகங்கள், செல்வாக்குகள் மூலமும் சமயப் பற்றுடையவர்கள் உரியவர்களிடம் அணுகி வற்புறுத்தவேண்டும்.

3. சமய வளர்ச்சிக்காக அங்கங்கே ஏற்பட்டுள்ள அமைப்புகள் எல்லாவற்றையும் சமாசத்தின் தலைமையில் இணைத்து, ஆண்டுதோறும் நடைபெறும் மாநாடுகளில் அவற்றின் சார்பாளர் (பிரதிநிதி)களையும், முதன்மையான திருக்கோயில்கள் திருமடங்களுக்கு அழைப்பு விட்டு அவற்றின் முதல்வர்களையும் ஒன்று கூட்டிப் பேசச் செய்து, காலத்துக்கேற்ற முறையில் சமய வளர்ச்சிக்காகச் செய்யக்கூடிய செயல்கள் என்னென்ன என்று ஆராய்ந்து நன்றாக வாதித்து முடிவு கட்டச் செய்து, அவற்றை அப்படியே செயற்படுத்துமாறு செய்தல் வேண்டும்.

4. சமய வளர்ச்சிக்காகவே ஏற்பட்டுள்ள திருமடங்களின் ஆதரவைச் சிற்றூர் பேரூர்களில் எல்லாம் சமாசக் கிளைகளாகப் பல் வேறு சைவப் பெயர்களில் இயங்கும் புதிய அமைப்புகளையும் கண்டு அவற்றுக்கும், சமாசத்தோடு இணையும் பிற அமைப்புகளுக்கும் திங்கள் தோறும் ஒரு குறிப்பிட்ட அளவு பொருளுதவியும் செய்து அறிவுத் துறையில் நின்று சமய வளர்ச்சிக்குப் பணி செய்யுமாறு ஊக்க மூட்டி வர வேண்டும்.

5. அருள்நெறி தழைக்கவும், அன்பும் அறிவும் செழிக்கவும் சமாசத் தலைவர் சைவ சமயப் பாதிரியார் திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை B.A., L.T. அவர்களால் கால நிலைக் கேற்ப வகுக்கப் பெற்றுத் திருத் தருமபுர ஆதீனத்தின் வாழ்த்துதலையும் பெற்றுள்ள "வார வழிபாட்டு" முறை, ஓர் இயக்கம் போல் எங்கும் பரவுமாறு மேற்கண்ட அமைப்புகளெல்லாம் அதை அங்கங்கே ஒரு குறிப்பிட்ட நாளில் நேரத்தில் நடத்துதல் வேண்டும்.

6. நம் சமய உண்மைகளை நம் நாட்டவரைவிட மேல் நாட்டவர், அறிந்த வரையில் அரிதாகப் போற்றுவதனால், மேலும் விரிவாக அவர்கள் நம் சமயத்தைப் பற்றி அறியுமாறு தக்கவர்களை அந் நாடுகளுக்கு அனுப்பும்படி செய்யத் திருமடங்களைத் தூண்டி வற்புறுத்த வேண்டும்.

7. இச் செயல்களை எல்லாம் கிளர்ச்சியான முறையில் செய்வதற்குத் துணையாக இருக்குமாறு சமாசத்தின் இதழாகிய சித்தாந்தத்தோடு, சமயத் தொண்டுக்கும் ஆக்கமாகவுள்ள முல்லைக் கொடி போன்ற கிழமைக் கிளர்ச்சி இதழ்களின் துணையையும் அவற்றிற்குத் தக்க ஆதாவு செய்வதன் மூலம் பெற வேண்டும்.

—ஆடலரசு.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அருட் செல்வத்தை அடைய ஆற்றல்கொள்ள வேண்டும்.

தற்பொழுது பெண்கள் அருள் வழியாக முன்னேறுவதற்கு வாய்ப்பாகத் திருமுறை இசைப் பயிற்சி ஒன்றைச் சென்னையில் அமைத்துள்ளார்கள். திருமுறையில் உள்ள பாட்டுகள் வாழ்க்கையை முறைப்படுத்தி வகையாகச் செலுத்தி, ஞானத்தைத் தருவன. சர்க்கரையைவிடக் கற்கண்டு எவ்விதம் இனிக்குமோ அதுபோல் படிப்பதைவிடப் பாட்டால்தான் அருள் அதிகமாகத் தோன்றும். இசையால் மகிழ்ச்சி, நுட்பம், ஆற்றல் உண்டாகின்றன. அப்பொழுது நாம் மனமும், சொல்லும், செயலும் ஒன்றியிருக்கும்படி பழகுவோமானால் நம் அக வன்மைகள் அதிகமாகும். பெண்கள் ஆண்டவன் முன் பாடுவதற்குச் சிறிதும் வெட்கப்படாமல் முன் வரவேண்டும்; இசை பயில வேண்டும்; பல முறை பாடப் பாடக் கல் மனமும் கசிந்துருகும்; உருகும் உள்ளம் அருளை அடையும்; அருட் செல்வமே வாழ்க்கையின் முன்னேற்றம்.

---

## முல்லைக் கொடி' நேயர்க்கு

5-10-51- விருந்து 'முல்லைக் கொடி'யின் புதிய ஆண்டு (4-ம் கிளை) தொடங்கி நடந்துவருகிறது

சென்ற ஆண்டுக்குக் கையொப்பம் எந்த மாதம் அனுப்பியிருந்தாலும், சென்ற ஆண்டுடன் அது முடிவெய்தும். இதழ்கள் சேராமல் குறையிருந்தால் அன்பர்கள் அவற்றைத் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவே, இந்தப் புதிய ஆண்டுக்குப் புதுக் கையொப்பம் அனுப்பி வைக்க வேண்டும். இதுவரையில் அனுப்பாமலிருக்கும் அன்பர்கள், அன்பு கூர்ந்து, விரைவில் அனுப்பி வைப்பார்களாக!

செய்தியாளர்.

## குருகுலத்துக்கு - - - வாழ்த்து

திருவள்ளுவர் உலகப் பெரியார். உலகத்துக்கு ஒருவர் கடவுள் என்பதுபோல் இவரும் ஒருவர். அதனால், இவருக்கும் 'தேவர்' என்று பெயருண்டு. ஆகவே, திருவள்ளுவர் வாக்கு, தேவ வாக்கு.

கடவுள் எல்லார்க்கும் பொதுவானவர். திருவள்ளுவரும் எல்லார்க்கும் பொதுவான வாழ்க்கை வேதம் அருளிச் செய்திருக்கின்றார்.

சாதி மதம் நாடு மொழி நிறம் முதலிய எவ்வகை வேற்றுமையும் இன்றி, எவ்வகைப் பற்றும் இன்றி, எவ்வகைச் சார்பும் இன்றித், தூய உண்மையுள்ளவராக வாழ்க்கையைக் கடைப்பிடிக்க முந்தும் உண்மையாளர்க்குத் திருவள்ளுவர் ஒருவரே உலகுக்கு வழி காட்டி!

உலகத் தலைவர்கள். மனமாரப் பின்பற்றும் பெருங் குரவராய் உயர்ந்து நின்றவர், எல்லாக் காலத்திலும் திருவள்ளுவர் ஒருவரே!

மாம்பாக்கம் குருகுலம் தெய்வத் திருவள்ளுவரின் ஆதீனம்! அதனால், அது, உலகு முழுவதும் இணங்கிப் பணிபுரிந்து நலம் பெறும் சிறப்பு வாய்ந்தது! குருகுலப் பணியாளர் இக் காரணங்களால் உலகப் பணியாளராகின்றனர்.

'மன்பதைப் பணி அலுவலகம்' 'உலகோர் யாத்திரைத் தலம்' 'உலக குருபீடம்' என்பது, குருகுலத்துக்கு நன்கு பொருந்துமபடி, ஆதிகுரு திருவள்ளுவரும் ஆதிபகவனும் அருள் புரிவாராக!

—குருகுலத்தார்
கூட்டு வழிபாட்டுக் குரல்!

# சிலப்பதிகாரம்

## 11. மாதவியைப் பிரிதல்

‘ முத்துசாமி ’

இந்திர விழா நாட்களில் காவிரிப்பூம்பட்டினத்தில் மக்கள் பெருங்களிப்போடிருந்தமை கண்டோம். கோவலனும் அங்ஙனமே மாதவியோடு கூடி இன்பக் கேணியில் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தான். மாதவி கலவியுடையவளாதலால் அவள் கண்ணை ஆசிரியர் செங்கண் என்றனர். கண்ணகி கலவியின்றித் தனித்திருந்தாளாதலின் அவள் கண்ணைக் கருங்கண் என்றார். இதனால் கலவிக் காலத்துக் கண் சிவப்புறும் என்பதும், மற்றக் காலத்துத் தன்னியல்பில் கருங்கண்ணாயிருக்கும் என்பதும் பெற்றாம்.

அவ்விழாவின் இறுதி நெருங்குகையில் ஒரு நாள் மாதவியின் செங்கண்ணும் கண்ணகியின் கருங்கண்ணும் முறையே வலத்திலும் இடத்திலும் துடித்தன. மாதர்க்கு இடக்கண் துடித்தல் பின்வரும் நலத்துக்கு அறிகுறியென்றும், வலக்கண் துடித்தல் நலமல்லாததற்கு அறிகுறியென்றும் இன்னமும் மக்கள் நம்புகின்றனர். ஆடவர்க்காயின் இதற்கு மாறாகக் கொள்ளப்படும். அங்ஙனம் இருவர் கண்ணும் துடித்தது. அது பின்னர்க் கோவலன் மாதவியைப் பிரிந்து கண்ணகியைக் கூடப் போவதை உணர்த்தியவாறாம்.

இந்திர விழா நாட்களில் மாதவியின் ஆடலும் பாடலும் நிகழ்வதுண்டு. அக்காலத்தில் ஆடல் பாடல் அழகு என்னும் மூன்றிலும் ஈடிணையின்றி இருந்தாளானமையின் பெருவிழாவான அக் கொண்டாட்டத்தில் மாதவியின் ஆடல் பாடல் கண்டு மக்கள் மகிழ்ந்திருந்தனர். மக்கள் மட்டுமென்ன, வெள்ளி மலையில் காமனுக்கு விழாக் கொண்டாடும் ஒரு விஞ்சை வீரனும் தன் காதலிக்கு ஆங்குப் போந்து மாதவியின் ஆடலைக் காட்டியதோடு, நாளங்காடிப் பூதம் ஐவகை மன்றம் முதலியவைகளையும் காட்டினான். பிற தேவர்களும் மக்கள் காணாமுறைமையால் கண்டு மகிழ்ந்திருந்தனர்.

அக்காலத்து மாதவி பதினொரு வகையான கூத்துக்கள் ஆடிக்காட்டினள் என்று ஆசிரியர் கூறுகிறார். அவையாவன: இறைவன் திரிபுரக் காலத்தாடிய கொடுகொட்டி, திசைமுகன் காண இறைவன் ஆடிய பாண்டரங்கம்; கஞ்சன் வஞ்சத்தினால் வந்த யானையின் கொம்பை ஒடித்தற்கு நின்றாடிய திருமாலின் அல்லியத் தொகுதி; வாணாசுரனோடு மல்யுத்தம் புரிந்த திருமாலின் மற்கூத்து; சூரனது வஞ்சகத்தைக் கடக்க முருகன் ஆடிய துடிக்கூத்து; முருகன் அவுணரோடு போரிடும்போது குடை சாய்த்து ஆடிய குடைக் கூத்து; வாணன் பேரூர் மறுகிடை மாயோன் குடம் கொண்டாடிய குடக் கூத்து; ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்தோடு காமன் ஆடிய பேடிக் கூத்து; காய்சின அவுணர் கடுந்தொழில் பொறாளாய் மாயவள் ஆடிய மரக்காற் கூத்து; அவுணர் போர்க் கோலம் நீங்கத் திருமகள் கொல்லிப் பாவை வடிவில் ஆடிய பாவைக்கூத்து; வாணபுரத்து வடக்கு வாயிற் புறத்துள்ள வயலில் அயிராணி கடைசியர் (உழத்தியர்) வடிவு கொண்டு ஆடிய கடைக்கூத்து என்னும் பதினொன்றுமாம்.

மாதவி ஆடல் பாடலால் மக்களை மகிழ்வித்துப் பெரும் புகழோடு விளங்கியிருக்க, அவ்வமயம் கோவலன் ஊடற் கோலத்தோடு இருந்தான். அவனை மகிழ்விக்க மாதவி தன்னை அழகாய் அலங்கரித்துக் கொண்டு வந்து அவன் ஊடலைத் தீர்த்துக் கூடி மகிழ்ந்திருந்தனள்.

அவள் அலங்கரித்துக் கொண்ட விதத்தை ஆசிரியர் விரிவாகக் கூறியிருக்கின்றனர். இன்னின்ன நகைகள் அணிந்து கொண்டாள் என்னும் விபரமும் கொடுக்கின்றார். அவற்றை ஆங்குக் காண்க.

முழு நிலா நாளில் தொடங்கி இந்திர விழா இருபத்தெட்டு நாட்கள் நடந்து அடுத்த முழு நிலா நாளோடு முடிவுற்றது. அந்நிலா நாளில் மக்கள் திரண்டு கடலாடச் சென்றனர். மாதவியும் கடல் விளையாட்டுக் காண விரும்பினாள். ஆகவே விடிவதற்கு முன் வைகறைப் போதில் கடற்கரைக்குச் சென்றனர்.

கோவலன் அத்திரியில் (கோவேறு கழுதை) ஏறிச் சென்றான். மாதவி ஒரு வையத்தில் (வண்டி) சென்றாள்.

இக்காலத்திலும் சில சமயங்களில் ஏதேனும் விழா நாளில் மக்கள் கூட்டமாய்க் கடலாடச் செல்வதுண்டு. சிறுவர்கள் மகிழ்ச்சியுடன் மணற்பரப்பிலே ஓடியாடியும், சிறு வீடு கட்டியும் விளையாடுவர். சென்னையில் மக்கள் பகலெல்லாம் காற்றுப் புகாத அறைகளில் வதிந்து வாடியிருப்பாரானமையின் மாலையில் நல்ல காற்று நுகரப் பெருங்கூட்டமாய் நாளும் செல்கின்றனர். கடல் பக்கத்தில் இல்லாத ஊராயிருப்பின் ஆற்றங்கரைக்குச் செல்வர். பெரும்பாலும் மாலையிலேயே இக்காலத்தில் செல்வது வழக்கம். ஆனால் அவ்விழாவின் இறுதியில் மக்கள் வைகறைப்போதில் சென்றனர்.

அந் நேரத்தில் இருளாயிருக்குமேயெனின் அந்நாளில் வெண்மணலில் கிடக்கும் சிறு வெண்கடுகும் புலப்படக் காணும்படியாக ஒளியுடையதாயிருந்ததாம். அங்ஙனம் ஒளி பரப்பிக் கொண்டிருந்தவைகளில் ஒன்று கலங்கரை விளக்கம். அதனை இக்காலத்து **Light-house** என்பர். பேராசிரியர் சேதுப் பிள்ளையவர்கள் சென்னை அடியார்கள் ஞாயிறு திருக்கூட்டத்தின் ஆண்டு விழாவில் அண்மையில் பேசுகையில் அதனைச் 'சூழ் ஒளி விளக்கு' என்றும் கூறலாம் என்றனர். (சூழ்தல்—சுழலுதல்).

கோவலனும் மாதவியும் புது மணற் பரப்பிலே புன்னை மா நிழலில் சித்திரப்பாடமைந்த திரையைச் சுற்றி வளைத்துக் கட்டிக்கொண்டு வெண்காற் கட்டிலில் அமர்ந்துகொண்டனர். மாதவி தன் தோழி வசந்தமாலையிடமிருந்த யாழை வாங்கிச் சரி பார்த்துக் கோவலன் கையில் கொடுத்தனள்.

யாழ் என்னும் கருவி இக்காலத்தில் இல்லை. வீணை ஏறக்குறைய அதன் வடிவை ஒத்து இக்காலத்துக் கையாளப்படுகிறது. யாழைப்பற்றி அறிய விரும்புவார் காலஞ்சென்ற விபுலாநந்த அடிகள் எழுதி உதவியிருக்கும் யாழாராய்ச்சி நூலில் கண்டு கொள்க.

கோவலன் யாழை வாங்கி அகப்பொருட் கருத்தமைந்த இசைப் பாட்டுக்களை யாழிலிட்டுப் பாடினன். அப் பாட்டுக்கள் அகப் பொருட் கருத்தமைந்தவை என்று எண்ணாமல் மாதவி 'இவற்றுள் மன்னுமோர் குறிப்புண்டு, இவன் தன் நிலை மயங்கினான்' என்று எண்ணித் தானும் யாழினை வாங்கி வேறு ஒரு குறிப்புடையாள் போல வரிப் பாடல்கள் பல பாடினாள். அவற்றைக் கேட்ட கோவலன் 'யான் கானல் வரிப் பாட்டுப் பாட, இவள் மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் ஆகலின் வேறொன்றின் மீது மனம் வைத்துப் பாடினாள்' என்று, அணைத்த கையை விடுத்து ஏவலாளர் சூழ மாதவியைத் தனியே விட்டுப் போயினான். மாதவி கையற்ற நெஞ்சினளாய்த் தனியே வீடு போய்ச் சேர்ந்தாள்.

மாதவி கணிகையர் குலத்தவளாதலால் தன் குல வழக்கப்படி மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் என்று கோவலன் எண்ணினான். இருவரும் யாதொரு குற்றமுமற்றவர்களாயிருப்பினும் ஊழ்வினை உருத்துத் தன் பயனை நுகர்வித்ததாதலின் ஒருவரையொருவர் மாறுகொள எண்ணும்படி யாயிற்று.

ஒரு பெண்ணைக் கடற்கரையிலே தனித்து விட்டுச் செல்லுதல் ஆடவர்க்கு அழகாகுமோ? அவள் வேறொன்றில் கருத்து வைத்துப் பாடினாள் என்பதைத் தீர ஆராய்ந்து குற்றமுடையவள் தானா என்று முடிவுக்கு வருமுன் அவளிடம் சொல்லாமலே பிரியலாமா? அகப் பொருட் பாடல் பாடுவது குற்றமா? கோவலன் ஓர் இரக்கமற்றவன்; பெருங் காமுகன். காமவயப்பட்டே மாதவியைக் கூடினானேயன்றி, மெய்க்காதல் கொண்டவனாயின், இங்ஙனம் பிரியான். இவ்வாறெல்லாம் கோவலனைப் பற்றிக் கூறுவர்.

அங்ஙனம் அவன் செய்கையை ஆய்ந்து பார்ப்பதற்கு ஆசிரியர் இடந்தராமலும், அவன் செய்கையைக் குற்றமென்றோ

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, :: சென்னை-1.

அன்றி அன்றென்றே கூறுமலும், "யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்துருத்ததாகலின்" என்று ஊழ்வினையின்மேல் பொறுப்பனைத்தும் போடுகிறார்.

சிலப்பதிகாரத்தில் 'கானல் வரி' என்னும் பகுதியில் கோவலன் மாதவி இவர்கள் பாடிய வரிப் பாட்டுக்கள் வருகின்றன. அவைகளை விரிக்க அகப்பொருள் நூலில் மிக்க புலமைவேண்டுமாதலினாலும், அது முல்லைக் கொடியில் கிழமைதோறும் 'நற்றிணை யழகு' என்னும் தலைப்பில் நற்றிணைப் பாடல்களின் அகப் பொருட் கருத்துக்களை விளக்கி மகிழ்விக்கும் பெரியார் திரு. R. G. பிள்ளை போன்றாருக்கே கூடுமாதலினாலும் ஈண்டு அவற்றை விரிக்கவில்லை. எனினும், தொடர்புக்காகக் கோவலன் பாடலில் ஒன்றும் மாதவி பாடலில் ஒன்றும் பார்த்து மேற் செல்வோம்.

கோவலன் பாடியது:

தலைவன் தலைவியைப் பார்த்துக் கூறியது:

"கடல்புக் குயிர்கொன்று
வாழ்வர்நின் ஐயர்
உடல்புக் குயிர்கொன்று
வாழ்வைமன் நீயும்
மிடல்புக் கடங்காத
வெம்முலையோ பாரம்
இடர்புக் கிடுகும்
இடையிழவல் கண்டாய்"

நின் முன்னோர் கடல் புகுந்து மீன் பிடித்துக் கொன்று வாழ்வர். கொல்லுதல் உங்கள் குல வழக்கம். அதன்படி நீயும் என்னுயிர் புகுந்து கொன்று வாழ்கின்றாய். என்னை இரக்கமின்றி அவ்வாறு கொன்று வாழ்கின்றாயெனினும், நின்பால் எனக்கு இரக்கமே உண்டாகின்றது. நினது கொடிய முலைகளின் மிகுந்த பாரத்தைத் தாங்காது இடை இடருறுகின்றது. ஒருகால் ஒடிந்து இழக்கவும் நேரிடலாம். ஆதலால் ஒரு வழி சொல்கிறேன் கேள். அப் பாரத்தை என் தோள்மீது ஏற்றி நின் இடையைக் காத்துக் கொள்.

மாதவி பாடியது:

தலைவனைப் பிரிந்த தலைவி கூறுகின்றாள்:

"நேர்ந்தநங் காதலர் நேமி
நெடுந்திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய
ஊர்கின்ற வோதமே
பூந்தண் பொழிலே
புணர்ந்தாடும் அன்னமே
ஈர்ந்தண் துறையே
இதுதகா தென்னீரே"

தலைவி முன்னாள் கூடிய இடத்தில் இருந்துகொண்டு தலைவன் வந்த தேர்ச் சக்கரத்தின் வடுவையும் அந்த இடத்தையும் பார்த்துப் பிரிவினை ஆற்றியிருக்கலாமென்றெண்ணினாள், கடல் அலை ஊர்ந்து வந்து அவ் வடிவையும் அழித்துச் சென்றது. 'தேர் ஊர்ந்த வழி சிதைய ஊர்கின்ற கடலலையே, தண் பொழிலே, துணையோடு புணர்ந்தாடும் அன்னமே, தண் துறையே! இங்ஙனம் என்னை வாட விட்டுவிட்டுப் பிரிந்திருத்தல் அவருக்குத் தகாதென்று போய்க் கூற மாட்டீர்களா?

உணர்ச்சி மேலீட்டால் சூழ்ந்திருக்கும் அஃறிணைப் பொருள்களையும் விளித்துக் கூறுதல் இயல்பு. அதன்படி இவளும் கடலலை முதலியவற்றை விவரித்துக் கூறினள்.

இப் பகுதியில் பலவகையான வரிப் பாட்டுக்கள் வருகின்றன; எனினும், யாவும் கானலிடத்துப் பாடியவாதலின் 'கானல் வரி' யெனப்பட்டது. கானல் என்பது கடற்கரைச் சோலை. வரியென்பது இசைப்பாட்டு.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்கு தெரு சென்னை 1.

# "நான் பெற்ற இன்பம்........"

‘பா. வரதராசன்’

நம் மாணிக்க வாசகப் பெருமான், இவ்வுலக மயக்கத்திலிருந்து தெளிந்த காரணத்திற்காக இறைவனைப் போற்றி என் நன்றி செலுத்த வேண்டும்? நிதி, பெண்டீர், மக்கள், குலம், கல்வி ஆகியவற்றில் எவற்றையுமே பொருள் கொள்ளாது மெய்யன்பால், உருகக் காரணமேன்? திருஞானசம்பந்தரின் தீராக் காதலின் காரணமியாது? திருவள்ளுவர், அறிவு பொருள் இவ்வுலக வாழ்வு முதலியவற்றைப் பொருட்படுத்தாது கல்வியின் பயனாக, இறை ஞானமே பெரிதென்று ஏன் எண்ண வேண்டும்?

இவர்களாலெல்லாம் இவ்வுலக வாழ்க்கையைச் செவ்வனே நடத்தக் கூட வில்லையா? அன்றி வறுமையின் கொடுமையாலோ, பிற இன்னல்களாலோ இவ் வாழ்வை வளமுற நடத்த மாட்டாமையால் வெறுத்துச் சொன்னவைகளா?

இம் மூவர் குறிக்கோளும் ஒரு நீர்மையன. வேற்றுமை, எடுத்தியம்புவதிலேதான். முன்னவர் இவ்வுலகில் தம் உண்மை நிலையை உணர்ந்ததற்கு நன்றியுள்ளவராயுள்ளார். அடுத்தவர் தமக்கு மெய்யின்பமானவற்றை எண்ணிக் கசிகின்றார். மூன்றாமவரோ, இவ்வுலக மக்களின் வாழ்நாள் முயற்சிகளெல்லாம் எதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டுமென்று அறிவுறுத்துகின்றார்.

நாம் யார்? நம் நிலை என்ன? நாம் சில ஆண்டுகளுக்குமுன் இவ்வுலக வாழ்க்கையை மேற்கொண்டோம். ஆரம்பத்தில் நம்மைப் பற்றியோ, அன்றி நம் சூழ் நிலையைப்பற்றியோ நமக்கதிகம் தெரியாது. ஆண்டுகள் ஏற ஏற, உருவிலும் அறிவிலும் வளர்ச்சி அடைந்து வந்தோம்; பொருள்களைத் தொகுத்தோம்; தொகுத்த பொருளை இருத்தினோம். இயல்பான உடல் உபாதைகளுக்குட்பட்டோம். பசி, பிணி, அயர்வால் வருந்தினோம். காமத்தால் துன்புறுத்தப்பட்டோம்; பசித்தபோது புசித்தும், இச்சித்தபோது மருவியும் அயர்ந்தபோது துயின்றும் இதுகாறும் நாட்களைக் கழித்தோம். நம் பொருள் தொகுப்பும் ஏனைய முயற்சிகளும் முற் கூறியவைகளை இனிதே மேற்கொள்ளக் குறித்தே இருந்தன. நம் எதிர்கால வாழ்வும் இப்படித்தான் தேய்வுறும். அதன் முடிவு? யாவரும் அறிந்ததொன்று!

இது புதிதன்று; நாம் ஏற்கனவே அறிந்ததொன்று! நமக்கு மிக மிகப் பழக்கமானதொன்று! ஆயினும் நம் நிலையை நாம் தெளிகின்றோமில்லை; தெளிய நியாயமுமில்லை.

இதை நம் மணிவாசகப் பெருமான் தெளிந்தார். தெளிந்து,

"பித்த உலகர் பெருந்துறைப்
பரப்பினுள்
மத்தக் களிறெனும்
அவாவிடைப் பிழைத்தும்
கல்வி என்னும் பல்கடற்
பிழைத்தும்
செல்வமென்னும் அல்லலிற்
பிழைத்தும்
நல்குர வென்னும் தொல்விடம்
பிழைத்தும்
புல்வரம் பாய பல துறை
பிழைத்தும்
தெய்வம் என்பதோர்
சித்தமுண் டாகி"

என்று பல இன்னல்களுக்குத் தப்பி உண்மையில் நாட்டமுற்றார். அதுவே உண்மையென்றும் இன்பமென்றும் அனுபவத்தா லுணர்ந்தார், அதையே பதறிப் பற்றினார்; கசிந்துருகிப் போற்றினார்.

மன்னும் ஏனைய உயிர்களினியல்புபோல் அவரும் இன்ப நாட்ட முள்ளவராய்த்தான் இருந்திருக்க வேண்டும். பசித்தபோதெல்லாம் பசி தீரப் புசித்திருப்பார்; இச்சை யெழுந்தபோதெல்லாம், இயைந்து இன்பமுற்றிருப்பார். உடலயர்ந்தபோதெல்லாம், துயில் கொண்டு மகிழ்ந்திருப்பார். இன்னும் ஏனைய உலக இன்பங்களை அவ்வப்போது துய்த்திருப்பார். இவற்றாலெல்லாம் அவர் உள்ளம் நிறைய வில்லை போலும். இவற்றின் துய்த்தலில் அடுத்தடுத்துத் துன்ப மிருப்பதை உணர்ந்திருக்க வேண்டும். அவ்வின்ப துன்பங்கள் பகலும் இரவும் போல் மாறி மாறி வந்ததை உணர்ந்திருக்க வேண்டும்.

ஏன்? வாழ்க்கை நெடுக நாம் இச்சித்துத் துய்க்க முன்னிற்கும் பொருள்கள், காலத்தில் செலவில் மாறியோ அல்லது அழிந்தோ செல்லும் பொருள்கள். அவற்றின் அழிவிலே, நிலை தடுமாற்றத்திலே, நம் இன்பமும் அழிந்தும் மாறியும் செல்கின்றது.

காலை மலர்ந்த அழகிய பூ, அயர்வு நீங்கிப் புத்துணர்வுடன் துயில் நீங்கி எழும் நம்மை, தன் புது மணத்தாலும் அழகிய நிறத்தாலும் மயக்கிய அப் பூ, மாலையில் வாட்டமுற்று, உதிர்ந்து மண்ணைக் கவ்வுகின்றது. அதன் அழகும் மணமும் எங்கே? காலையில் நம்மைப் பெரிது கவர்ந்த அதன் அழகு எங்குற்றது? இப்போது நாம் அதை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. நமக்கு அதன் மீதுற்ற இச்சையும், அபிமானமும், அதனால் துய்த்த இன்பமும் உடனே மண்ணைக் கவ்வுகின்றன.

அழியா உயிருக்கு இவ் வழியும் பொருள்களாலாய இன்பம் எங்ஙனம் பொருந்தும்; எனவே நாம் இன்பமெனப் பிழைபடக் கருதுவது இவ்வுடலின் தேவைகளைப் பூர்த்தி செய்யு முயற்சியில் நாம் அடையும் ஒரு சிறு திறைவன்றி வேறாகா.

எனவே அழியாத் தன்மை உள்ள இவ்வுயிர், நிலைத்த இன்பத்தைப் பெற, நிலைத்த ஒன்றைத்தான் தேட வேண்டும், தேடி அடைய வேண்டும். மற்றெதனாலும் அது நிலைத்த இன்பத்தைப் பெற முடியாது. நிலைத்த இன்பமென்பது, என்றுமிருப்பது; சலிப்பற்றது; எத்தகைய மாறுபாடும் அற்றது; அதுவே உண்மையானதுமாகும்.

அதை நாம், அன்றாடம் அரும்பாடு பட்டுத் தொகுக்கும் எப் பொருள்களாலும் அடைய முடியாது.

அதை அழியா உயிரிலே, அதன் நிலைத்த உணர்விலேதான் அனுபவிக்க முடியும். அதற்கு மனம் என்னும் சூக்குமக் கருவி ஒரு நிலைமட்டும் உதவுகின்றது.

---

# ✻ "முன்னேற்றம்" ✻

'மதி'

நாட்டில் நல்ல முன்னேற்ற நிலையை நாட்ட வேண்டுமானால் முதலில் அழுக்காறுகளை அகற்ற வேண்டும். ஔவைப்பிராட்டி "அவ்வியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு" என்று அருளிச் செய்துள்ளார். பிறரைப் பற்றி நாம் பொறாமை கொண்டு பேசினால் அது நம் செல்வத்திற்கு அழிவைத் தரும். பொருளாதாரத்தால் நாடு நன்மையைப் பெறும். ஆகவே பொருள் நிலையில் உயர நாம் அழுக்காறு நிலையை நீக்கவேண்டும்.

அதோடு நாம் எப்பொழுதும் ஊக்கமுடையவர்களாய் இருக்க வேண்டும். "ஊக்கமுடைமை ஆக்கத்திற்கழகு" என்று ஔவை கூறியுள்ளார். நாம் செய்வது எந்தத் தொழிலாயிருந்தாலும் மனம் தளராமல் செய்வதுதான் செல்வத்திற்கு அழகு என்று தெரிய வருகிறது. பெண்கள் செல்வம் என்றதுமே பணம் என்ற ஓர் ஆசை உணர்ச்சி அடைகின்றனர். அழியும் செல்வத்தின் மேல் எவ்வளவு விருப்பம் வைத்துள்ளோமோ அதுபோல் அழியாத் தன்மை வாய்ந்த அருள் செல்வத்தின்மேல் விருப்பம் வைத்து முன்னேற வழி தேட வேண்டும்.

நம் ஆசிரியர் இளவழகனார் அவர்கள் அருள் செல்வத்தைப் பற்றிப் பெரிய புராண வாயிலாகப் பல வகையாலும் அருளிச் செய்கிறார்கள். அருள் செல்வமாகிய அமர வாழ்வைத் தம் வாக்கால் விளக்க வந்தவர்கள் அடியார்கள் என அடிக்கடி ஆசிரியர் எடுத்துக் கூறுவார். உதாரணமாகச் சுந்தரமூர்த்தி அடிகளார் இறைவன் எங்கே இருக்கிறார் என்று உணர்ந்து, தக்க தெய்வத் தன்மையைத் தெரிந்து துதித்தார், வழி பட்டார், ஆளாயினார், வாழ்க்கையில் ஈடுபட்டு மேன்மை யுற்றார். அவற்றைத் தம் அருட் பாடல்களில் விளக்கி யிருக்கிறார்.

தெய்வத் தன்மை வாய்ந்த ஔவையார் "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு" என்று அருளிச் செய்துள்ளார். உண்மை தெரியாதவர்கள் உணவைக் குறைத்து உண்பதே பெண் மக்களுக்கு அழகாகும் என்று கூறுவார்கள். அது உண்மையான உரை இல்லை. சிலர் தங்களுக்கு உள்ள பொருள்களைக், கிடைத்த மட்டில் மன அமைதி பெறாமல் பின்னும் அவற்றைப் பெறுதற்கு அளவு கடந்த விருப்பம் கொள்கிறார்கள். இதனால் யாவருக்கும் அளவிறந்த துன்பத்தையும் கவலையையும் வருவித்தலால் அவர்கள் பொருள் மேல் இருக்கும் அவ் விருப்பத்தைச் சுருக்கிக் கொள்ளுதல் வேண்டுமென்பதே ஔவைப் பிராட்டியார் கருத்தாகும் எனப் பெரியோர் கூறுகின்றனர். நாமும் சிந்தித்துப் பார்த்தால் அப்படி கூறுவது உண்மையே எனப் புலப்படுகிறது. ஆகவே அழியும் செல்வத்தின் மேலுள்ள ஆசையைக் குறைத்து

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம் மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)